ஊர்கூடி தேரிழுப்போம்...

# நாங்கள்

அல்வாய் - மனோகரா

இதழ் 12

தை 1 – 31 2022

பிரதம ஆசிரியர்
க.பரணீதரன்
இணைஆசிரியர்கள்
வெ. துஷ்யந்தன்
செ. கணேசன்

அல்வாய் மனோகராக் கிராம ஆவணப்படுத்தல் மாதாந்த பத்திரிகை 30/-

நாங்கள் வாசகர்களுக்கு வணக்கம்.

புதியதொரு ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளோம். இந்த ஆண்டு அனைவருக்கும் சிறப்பானதாக அமைய இறைவனை வேண்டிக் கொள்கின்றோம். சென்ற ஆண்டு மாசி மாதம் ஆரம்பிக்கப்பட்ட "நாங்கள்" ஆவணப்பத்திரிகை 11 மாதங்களும் தொடர்ச்சியாக வெளி வந்தது. எம்மால் முடிந்த விடயங்களை தொடர்ச்சியாக உங்கள் பலரின் ஆதரவோடு ஆவணப்படுத்தினோம். இந்த ஆண்டும் ஆவணப்படுத்தல் சிறப்பாக அமைய உங்கள் ஆதரவு தேவை. உங்கள் உறவினர்கள் பற்றிய தகவல்களை நீங்கள் தான் தரவேண்டும். எல்லாவற்றையும் நாங்களே சேகரிக்க வேண்டும் என எண்ணாதீர்கள். உங்கள் ஒத்துழைப்பு இருந்தால் தான் முழுமையாக ஆவணப்படுத்தலை மேற்கொள்ள முடியும். இந்த பத்திரிகை, சேவை நோக்கில் தான் வெளி வருகின்றது. இந்த பத்திரிகை ஆவணப்படுத்தல் சார்ந்த பத்திரிகை என்பதை பல தடவைகள் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டு வருகின்றோம். இது விமர்சனப் பத்திரிகை அல்ல. எனவே இந்த பத்திரிகைக்கு பொருத்தமான விடயங்களை மட்டும் கட்டுரையாளர்கள் பதிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். இந்த பத்திரிகை ஊரவர்களது ஒற்றுமைக்காக வெளிவருவது என்பதை கருத்தில் கொண்டு கட்டுரையாளர்கள் செயற்படுங்கள். தயவு செய்து பிரச்சினையான விடயங்களை, பிரச்சினை தீர்க்கப்படாத விடயங்களை இங்கு பதிவுக்கு அனுப்ப வேண்டாம். இந்த பத்திரிகை நீண்ட காலம் வெளி வர வேண்டும். பதிவு செய்ய வேண்டிய பல விடயங்கள் உள்ளன என்பதை அனைவரும் கருத்திற் கொண்டு செயற்படுங்கள். சென்ற ஆண்டு 2021 மாசி தொடக்கம் 2022 தை வரை எமதூர் சார்ந்த 44 கவிஞர்களின் கவிதைகளை ஆவணப்படுத்தினோம். இந்த ஆண்டு எம்மவர்களது சிறுகதைகளை ஒவ்வொரு இதழிலும் ஆவணப்படுத்த வுள்ளோம். பிறப்பு தொடர்பான தகவல்களை நீங்கள் தெரியப்படுத்தினால் தான் எமக்கு தெரிய வரும். முழுமையான ஆவணப்படுத்தலுக்கு உங்கள் அனைவரது ஒத்துழைப்பு அவசியம் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கொள்கின்றோம்.


- க.பரணீதரன்

**உனக்காக வாழாதே பிறர்காக வாழ்**

## உள்ளே...

1. அல்வாய்க்கிராமம் பெற்றெடுத்த கொடை வள்ளல்
   அமரர் ச. வெற்றியர்

2. சித்திராபூரணை உதைபந்தாட்ட ஆரம்ப கர்த்தாக்களில்
   ஒருவரான அமரர் மூ.நாகமுத்து



3. அல்வாயூரின் ஆரம்பகால தீவிர இலக்கிய வாசகர்
   அமரர் ச.தியாகு

4. காலம் கரைத்த மனப்பதிவுகள் – 1

5. அஞ்சலி
   மாசிலாமணி ஸ்ரீதரன்

6. மீள்பிரசுர நம்மவர் கவிதைகள்
   வே.ஜ.குமாரதாசன்
   செல்லத்தம்பி சுரேந்திரா
   சின்னத்தம்பி பத்மராஜன்
   இரா. கௌரிபாலன்
   வே.ஜ.வரதராஜன்

7. மீள் பிரசுர சிறுகதை
   அல்வாயூர் கவிஞர் மு. செல்லையா

தொடர்புகளுக்கு:
கலைஅகம்,
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் வீதி
அல்வாய்.
தொலைபேசி : 0775991949
email - jeevanathy@yahoo.com

# அல்வாய்க் கிராமம் பெற்றெடுத்த கொடைவள்ளல் அமரர் ச.வெற்றியர்

கலாநிதி த. கலாமணி

எமது அல்வாய்க் கிராமம் என்றும் பெருமைப்படத்தக்கதாய் வாழ்ந்த கொடை வள்ளல் அமரர் ச.வெற்றியர் அவர்களது வாழ்க்கை வரலாறு எமது கிராம வரலாற்றில் பொன் னெழுத்துகளால் பொறிக்கப்படவேண்டியது. "புதுவீட்டு வெற்றியர்" என்று பலராலும் அழைக்கப்பட்டு வந்த அமரர் ச.வெற்றியர் அவர்கள் பொதுநலக்காரியங்கள் பலவற்றுக்கும் நிதிஉதவி செய்து வந்தவர். அவரை கொடையாளி என்றே ஊரவரும் அயலூரவரும் மதித்து வந்தமை என்றும் நினைவுகூரப்படத்தக்கது.

வெற்றியர் அவர்கள் சடையர் - வள்ளி தம்பதியினருக்கு மூத்த உத்தம புத்திரனாக *1893* ஆம் ஆண்டிற் பிறந்தவர். சீனிப்பிள்ளை வேலுப் பிள்ளை, மாணிக்கம், கதிராசி சவலை, வல்லிபுரம், செல்லம் மகேசு, சின்னத்துரை, திரவியம் சீனிமுத்து ஆகியோர் இவரின் உடன் பிறப்புகள். வெற்றியர் அவர்கள் கந்தாசையின் மகளும் க.இரத்தினம், க.மகேசு, க.தம்பிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் ஆகிய கோவிற்பிள்ளை என்பவரை மணம் முடித்தார். இவர்களின் திருமண பந்தத்தில் பெண் மகவு ஒன்றைப் பெற்றெடுத்து சாரதாமணி எனப்பெயர் சூட்டினர். சாரதாமணியை செல்லப் பிள்ளையாக வளர்த்து வந்த வெற்றியர் அவர்கள், வேலுப்பிள்ளை - சீனிப்பிள்ளை தம்பதியினரின் மகனும் தமது சொந்தமருமகனுமான பாலசிங்கம் அவர்களையே தனது மகளுக்கான மணாளனாகத் தேர்ந்தெடுத்தார்.

வெற்றியர் அவர்கள் எப்போதும் உறவு பேணி வந்தவர். தமது சகோதர, சகோதரிகளையும் அவர்களின் வாழ்க்கைத் துணைகளையும் பெறா மக்களையும், மருமக்களையும் பேரப்பிள்ளை களையும் தாம் இறக்கும் வரை அன்பு பாராட்டி அரவணைத்தவர். தமது உறவுகளிடையே எப்போதும் ஒற்றுமை நிலவ வேண்டும் என விரும்பினார். இவர்களிடையே இருந்த பிணைப் பைக் கண்டு ஊரவர்கள் வியந்தனர்.

வெற்றியர் அவர்கள் மிகுந்த நேர்மை யானவர். தமது மனைவி இறந்த பின்பு தமது மகளை வளர்த்து ஆளாக்கி ஒரு நல்ல வரனுக்கு திருமணம் செய்து வைப்பதையே தம் இலட்சியமாகக் கொண்டு, தமது சுகந்துறந்து வாழ்ந்து வந்தார். தமது சகோதரியின் மகனான பாலசிங்கம் அவர்களைத் தமது மகளுக்கு மணம் செய்து வைத்து மகிழ்ந்தார். தமது மகளின் குழந்தைக்கு வெற்றிவேல் என்று பெயர்சூட்டி இன்புற்றார்.

வெற்றியர் அவர்கள் பள்ளிக்கல்வியுடன் இசைநாடகத்திலும் நிறைந்த தேர்ச்சி பெற்றவர். இவரது சகோதரன் சின்னத்துரையும் மருமகன் பாலசிங்கம் ஆகியோரும் இசைநாடகங்களில் நடித்து பேரும் புகழும் பெற்றவர்கள். கலைகளை மதித்து வந்த இவர் கலைநிகழ்ச்சிகளுக்கு செலவு களுக்காக உதவியும் வழங்கி வந்தார். ஊரில் நிகழும் பொதுநலக் காரியங்களுக்கு இவரின் நிதிப் பங்களிப்பு பெரிதும் உதவி வந்தது. ஆரம்பகால பத்தாம் பூஜைத் தலைவரான வெற்றியர் அவர்கள் பூஜைகளைச் சிறப்பாகச் செய்து வந்ததோடு கோயிலுக்கான நிதிப்பங்களிப்புகளையும் செய்து வந்தார். எமது ஆலடிப்பிள்ளையார் கோயிலுக்கு இவர் பெருஞ்செலவில் பூஜைக்கு வேண்டிய பெரும் தாம்பாளங்கள், குத்துவிளக்குகள், தீபங்கள் போன்ற தளபாடங்களை வழங்கியிருந்தார். எமது ஆலயத்திற்கு ஒரு கிணறு அமைய வேண்டிய அவசியத்தை உணர்ந்து, ஆலய பரிபாலனசபை கிணற்றைவெட்ட ஆரம்பித்தபோது எவரும் எதிர் பார்க்காத வகையில் பெரும் பணத்தை அத்திருப் பணிக்காக ஈந்தார். எமதூரில் மாத்திரமன்றி பிற ஊர்களிலிருந்தும் பொது நலக்காரியங்களுக்காக இவரை அணுகியபோது மனமுவந்து நிதிப் பங்களிப்புகளைச் செய்து வந்தார். ஒரு சமயம் கரவெட்டியில் எம்மவர்களின் வீடுகள் சாதிமான் களால் கொளுத்தப்பட்ட போது, அவ்வீடுகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு வேண்டிய நிதிப்பங்களிப்பிலும் இவருடைய பங்களிப்பு

இருந்தது. அந்நாளில் கரவெட்டியில் கலட்டியில் வாழ்ந்துவந்த அதிபர் நீ.சுப்பிரமணியம் அவர்கள் விக்ரறி கழகம் எனும் கரப்பந்தாட்டக் குழுவைத் தோற்றுவித்திருந்தார். இக்கழகம் வடமாகாணத்தில் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சிறந்த கழகங்களையெல்லாம் வெற்றிகொண்டு, பின்னர் வெவ்வேறு மாகாணங்களைச் சேர்ந்த வெற்றிக் குழுக்களுடனும் போட்டியில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கும் தெரிவானது. இறுதிப் போட்டியில் கம்பஹா அணியிடம் வெற்றி வாய்ப்பை இழந்திருந்தாலும், அகில இலங்கை ரீதியாக விக்ரறி கழகத்தின் திறமை பேசப்பட்டது. இக்கழகத்திற்காக நீ.சுப்பிரமணியம் அவர்களுடன் முன்னின்று உழைத்தவர்களுள் வெற்றியர் அவர்கள் முக்கியமானவர். அக்கழகத்தின் பயணச் செலவுகளுக்கும் வெற்றியர் அவர்களின் பங்களிப்பு இருந்து வந்தது.

அமரர் வெற்றியர் அவர்களே எமதூரின் முதன் முதலில் பாரிய கல்வீடொன்றைக் கட்டியவர். இதனால் இவ்வீடு "புதுவீடு" என்று பலராலும் அழைக்கப்பட்டது. இவ்வீட்டை தமது சகோதரி செல்லம் அவர்களுக்கு வெற்றியர் அவர்கள் சீதனமாக வழங்கியிருந்தார். இவ்வீடு காரணமாகவே, வெற்றியர் அவர்கள் "புதுவீட்டு வெற்றியர்" எனவும் அவரின் சகோதர, சகோதரியரும் புதுவீட்டினர் என்றும் அழைக்கப்பட்டு வந்தனர். வெற்றியர் அவர்கள் தமது சகோதரங்களுடனும் அவர்களின் பிள்ளைகளுடனும் சேர்ந்து வெட்டிய ஐம்பத்திரண்டு அடி ஆழமுள்ள பெருங்கிணறும் புதுவீட்டுக் கிணறு என்றே அழைக்கப்பட்டு வந்தது. 1940களின் இறுதிக் கூறில் வெட்டப்பட்ட இக்கிணறு பொளிகற்களால் கட்டப்பட்டது. 1949 இல் எமது சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயிலின் மூலவிக்கிரகமாக ஆசிரியர் "சைவம்" ச.சிவகுரு அவர்களால் கொண்டு வரப்பட்ட பாலகணபதி விக்கிரகம் மூலஸ்தானத்தில் பிரதிட்டை செய்யப்படும் வரை புதுவீட்டுக்கிணற்றிலேயே இறக்கி வைக்கப்பட்டு பேணப்பட்டு வந்தது. இக்கிணற்றில் பாலகணபதி சில காலம் இருந்து வந்த அருட்சிறப்பினாற் போலும் இக்கிணற்றில் இதுவரை தவறிவீழ்ந்த எவருக்கும் சிறுகாயம்கூட ஏற்பட்டதில்லை. தனலக்சுமி கதிரவேல் அவர்களின் தாயார் தங்கம், முள்ளாவத்தையைச் சேர்ந்த சரஸ்வதி, நான்(த.கலாமணி), சிவானந்தன் ஆசிரியர் வீட்டில் உதவிக்காக நின்ற மலையகப் பிள்ளை ஒருவர் ஆகிய நால்வரும் இதுவரை இந்த ஆழக் கிணற்றிலே தவறி வீழ்ந்துள்ளனர். ஆயினும், ஒரு சிறு காயமுமின்றி இவர்கள் உயிர்தப்பிப் பிழைத்தமை பாலகணபதியின் அருட்சிறப்பினாலேயே என்ற நம்பிக்கை எமது ஊரவர் எல்லோரிடமும் உள்ளது.

அமரர் வெற்றியர் அவர்கள் சீவல் தொழில் புரிந்து வந்தவர். பின்பு இவர் தவறணைகளை நடத்தி வந்த குத்தகைக்காரர் ஆனார். வதிரியைச் சேர்ந்த குத்தகைக்காரர் அமரர் சி.மாரிமுத்து அவர்களுடன் இணைந்து சமபங்காளராய் இருந்து அநுராதபுரத்திலும் மட்டக்களப்பிலும் தவறணைகளை நடத்தி வந்தார். தொழில் நேர்மையுடனும் கண்ணியத்துடனும் செயற்பட்டு வந்தமையால் இறுதிவரை இவர்கள் இருவரும் நட்புக்குரியவர்களாகவே இருந்து வந்தனர்.

நிறைந்த அபிமானியும் சிறந்த கொடையாளியுமாகிய அமரர் ச.வெற்றியர் அவர்களின் தேகவியோகத்தின் போது, கவிஞர் மு.செல்லையா, சைவப்புலவர் சி.வல்லிபுரம், சைவப்புலவர் இ.செல்லத்துரை, கைரேகை சாஸ்திரி ச.தம்பிஐயா ஆகியோர் தேகவியோகம் குறித்த கவிகளை யாத்திருந்தனர். அக்கவிகளுள் கவிஞர் மு.செல்லையா அவர்கள் எழுதிய ஒரு பாடல் மனங்கொள்ளத்தக்கது.

பெட்டியிற் காசு பூட்டிப் பெருமிதம் வீணேபேசி
வட்டியைக் கணக்குப் பார்த்து வாயூறி ஊறி வாழ்ந்து
துட்டுமே ஈயா லோபத் துட்டர்கள் நாணங்கொள்ள
விட்டு நீ சுரந்து வாழ்ந்தாய் மேவினாய் புகழும் மேலே

அமரர் வெற்றியர் அவர்கள் இப்பூவுலகில் அறுபது ஆண்டுகள் நிறைவுற வாழ்ந்து, 1953ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.


ஐங்கரன் செல்வனா தம்பதியினருக்கு 2022.01.06 அன்று மானசி என்னும் மகள் பிறந்துள்ளார். எமது ஊருக்கு புதியதொரு அங்கத்தவர் இணைந்து கொள்கின்றார்

கீதாஞ்சன் கல்யாணி தம்பதியினருக்கு 2021.11.01 அன்று வர்ணிதன் என்னும் மகன் பிறந்துள்ளார். எமது ஊருக்கு புதியதொரு அங்கத்தவர் இணைந்து கொள்கின்றார்

ரெனிகாந் நதியா தம்பதியினருக்கு 2021.09.14 அன்று ஜெரூசின் என்னும் மகன் பிறந்துள்ளார். எமது ஊருக்கு புதியதொரு அங்கத்தவர் இணைந்து கொள்கின்றார்

# சித்திரா பூரணை உதைபந்தாட்ட ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவர் அமரர் மூ.நாகமுத்து

செல்லக்குட்டி கணேசன்



எமது கிராமத்தில் நடைபெற்று வந்த சித்திரா பூரணை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை முன்னெடுத்தவர்களில் ஒருவரான அமரர் மூ.நாகமுத்து அவர்கள் அல்வாய் மனோகரா வடலித்தோட்டம் குறிச்சியைச் சேர்ந்தவரான அமரர் மூத்தர் தம்பதியினரின் மூத்த புதல்வராவார். அமரர் மூ.பொன்னையா (பொன்மலர்ப்பதி) இவரின் உடன் பிறப்பாவார். தனது ஆரம்பக் கல்வியை வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கற்றவர், அக்கால சூழமைவுக்கேற்ப பாடசாலைக்கல்வியை இடை நிறுத்தி சுயதொழிலில் நாட்டம் கொண்டார்.

சிறுவயதிலேயே பனைசார் தொழிலில் நாட்டம் கொண்டு செயற்பட்டவர் கட்டடத் தொழிலிலும் (மேசன்) தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இவற்றோடு நின்று விடாது வர்த்தக நடவடிக்கையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். பனைசார் உற்பத்திப் பொருட்களான பாய், பெட்டி, பனங்கட்டி, ஒடியல், புளுக் கொடியல் என்பன இவரின் பிரதான வர்த்தகப் பொருட்களாயிருந்தன. இவரின் இடையறாத முயற்சியின் பயனாக அக் காலத்திலேயே மிகவும் செழிப்புற்ற குடும்பமாக இவரின் குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. இதனால் இவரின் சகோதரன் பொன்னையாவையும் நல்ல நிலைக்கு கொண்டுவர அயராது பாடுபட்டார்.

திருமண காலம் பொருந்திவர அல்வாய் மனோகரா வடயத் தோட்டம் (தற்போது திரு.திருமதி.சோதீஸ்வரா ராதா குடும்பத்தினர் வாழ்ந்து வருகின்ற இல்லம்) குறிச்சியைச் சேர்ந்த அமரர்களான திரு.திருமதி.வல்லிபுரம் அசுவதம் தம்பதிகளின் ஏக புதல்வி தங்கம் அவர்களை பெரியோர்களின் ஆசீர்வாதத்துடன் கரம் பற்றினார். (ஆனந்தம் என பெற்றோராலும் மற்றவர்களாலும் செல்லமாக அழைத்து வரப்பட்டு வந்த தங்கம், கணபதிப்பிள்ளை (குருக்கட்டு துன்னாலை), பொன்னையா (கேவோலை), செல்லக்குட்டி (பிச்சந்தோட்டம்), நாகலிங்கம் (மயிலிட்டி) ஆகியோரின் சகோதரியாவார்)

எமது சமூக நிறுவனங்களான சனசமூக நிலையம், ஆலய பரிபாலனசபை ஆகியவற்றின் செயற்பாடுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட இத் தம்பதியினர் எமது ஆலயம் கிடுகு கொட்டிலாக இருந்த காலத்திலேயே ஒரு மடத்தைக் கட்டி **1960** ஆம் ஆண்டு ஆலய செயற்பாட்டிற்காக பரிபாலன சபையிடம் உபகரித்தார்கள். இம் மடமானது காலத்தால் பல சேவைகளை செய்ததோடு மைதான (விளையாட்டு) செயற்பாடு



களுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இத்தம்பதியினர் இவற்றோடு நின்று விடாது பிள்ளையாரின் பிறந்த திதியான ஆவணிச் சதுர்த்தியை பொறுப்பேற்று அக்காலத்திலேயே மிகவும் பக்தி பூர்வமாக நிறைவேற்றி வந்தனர். இச்செயற்பாட்டில் தனது சகோதரனின் குடும்பத்தையும் இணைத்துச் செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தற்போது ஒவ்வொரு மாதமும் சதுர்த்திப் பூசை செய்யப் பட்டு வந்தாலும் எமது ஆலயத்தில் முதன் முதலில் சதுர்த்திப் பூசையை செய்து வந்தவர்கள் இக் குடும்பத்தினரே. இது மட்டுமல்லாமல் அக்காலத் திலேயே காத்தவராயர் (வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானம்) ஆலயத் திலே திருவெம்பா பத்தாம் நாள் பூசையை இக்குடும்பத்தினரே மிகச் சிறப்பாகச் செய்து வந்தார்கள். இதன் தொடர்ச்சியாக பாலகணபதி யான் ஆவணி சதுர்த்தியையும், காத்தவராயர் திருவெம்பா பத்தாம் நாள் பூசையையும் அவர் களது எச்சத்தார் பக்தி பூர்வாக செய்து வரு கின்றனர்.இவருக்கு இருந்த உதைபந்தாட்டத்தின் மீதான ஆர்வம் ஏற்படுத்திய எண்ணத்தின் வெளிப்பாடாக சிலருடன் இணைந்து ஏற்படுத்தப் பட்டதுதான் சித்திராபூரணை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியாகும். இக்காலத்தில் இவர்களின் நிதிப்பங்களிப்பும், உடலுழைப்பும், ஊக்கமும் செறிந்தே காணப்பட்டன. இவர்களின் இச் செயற் பாட்டால் வெளி இடங்களிலும் பிற மாவட்டங் களிலும் எமது கிராமம் நன்கு அறியப்பட்டிருந்தது என்பது மிகையான கூற்று அல்ல.

1970களின் நடுக்கூற்றில் மனோகரா சனசமூக நிலையம் முதன் முதலாக கல்லாலான கட்டடமாக அமையப் பெறுவதற்கு அம் மக்கள் ஆற்றிய சேவைக்கு முழுமூச்சாக நின்று ஒத் துழைப்பு வழங்கியவர் அமரர் மூ.நாகமுத்து அவர் கள். இவரின் இச் செயற்பாட்டை கௌரவித்து மனோகரா சனசமூகநிலையம் இவருக்கு பொன் னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்து மதிப் பளித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

இவ்வாறு தான் வாழ்ந்த கிராமத்துடன் மிக நெருக்கத்தைப் பேணி வாழ்ந்தவரான அமரர் மூ.நாகமுத்து அவர்கள் தனது மனைவியின் இழப்போடு தனது சகோதரனுடன் பொன் மலர்ப் பதியில் வாழ்ந்து வந்தார். இவ்வாறு சகோதரனுட னும் அவரது பிள்ளைகளுடனும் வாழ்ந்து வந்தவர் 1980பதுகளின் பிற்கூற்றில் தனது உலகியல் வாழ்வை நீக்கி இன்னோர் உலகிற்கான பயணத்தை மேற் கொண்டார்.



திரு திரவியநாதன்
ரவிமயூரன் அவர்கள்
இலங்கை தொழில் சார்
கற்கைகள் நிறுவனத்தின்
Dip.in.Media
கற்கைகள் பட்டம் பெற்று
எமதூருக்கு பெருமை
சேர்த்துள்ளார்.

**அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 2022 ம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபை 23.01.2022 அன்று தெரிவு செய்யப்பட்டது.**

தலைவர் - செ.சுபேந்திரா
செயலாளர் - மு.திருமால்
பொருளாளர் - த.சுபாஸ்
உபதலைவர் - ச.உதயணன்
உப செயலாளர் - மு.சஜீவ்
நிர்வாக சபை உறுப்பினர்கள்
1.ப.சசிவண்ணன்
2.வ.ஞானகரன்
3.ஸ்ரீ.முகுந்தன்
4.வி.துவாரகன்
5.கு.குபேந்திரன்
6.த.ரங்கநிதி
7.ர.இதயரதன்
8.வி.ஜிதேந்திரா
9.ஜெ.தனுசன்
10.இ.பிரதீப்
போசகர் - ந. துரைராஜா
கணக்காய்வாளர் - வி.செந்தூரன்

**2022 ம் ஆண்டுக்கான மனோகரா விளையாட்டு தலைவர்கள்**

| | | |
|---|---|---|
| உதைபந்தாட்டம் | - அணித்தலைவர் | - வ.மிதுஷன் |
| | - உப தலைவர் | - ஜெ.சாய்கிஷ்ணன் |
| துடுப்பாட்டம் | - அணித்தலைவர் | - பா.பிரதீப் |
| | - உப தலைவர் | - க.நிதர்சன் |
| எல்லே | - அணித்தலைவர் | - க.ஜெயதர்சன் |
| | - உப தலைவர் | - அ.சாலுஜன் |
| கரப்பந்தாட்டம் | - அணித்தலைவர் | - பா.பிரவீந் |

# அல்வாயூரின் ஆரம்பகாலத் தீவிர இலக்கிய வாசகர் அமரர் ச.தியாகு

■ கலாநிதி த. கலாமணி

இன்று எமது கிராமம் கல்வி, கலை, இலக்கியம், விளையாட்டு போன்ற சகல துறைகளிலும் வளர்ச்சி பெற்றதாக, ஏனையவர் பார்த்து வியக்கும் அளவுக்கு முன்னேறியுள்ளது. இத்துணை வளர்ச்சியும் முன்னேற்றமும் திடீரென்று ஏற்பட்டதல்ல. நாம் எமது தந்தையரின் தோள்களில் ஏறி நின்றே உலகைப் பார்த்து நாம் முன்னேறினோம். கவிஞர்கள், கலைஞர்கள், கல்வியாளர்கள், விளையாட்டு வீரர்கள், படைப்பாளர்கள், பல்துறை ஆற்றலாளர்கள் என்று இன்று நாம் பெருமை கொள்வதற்கு வழி வகுத்த எமது மூதாதையர்களின் பங்களிப்புகளை மறந்துவிடலாகாது. இன்று நினைத்துப் பார்க்கும் போதும் மூக்கின் மீது விரலை வைத்து நாம் ஆச்சரியப் படக்கூடிய அளவுக்கு நம் முன்னோர் அளித்த அருஞ் செல்வங்களை இன்று எமது தேட்டங்களாகக் கொள்ளும் நாம் அவர்களின் வாழ்க்கை வரலாறுகளை பதிவு செய்து கொள்ளவேண்டிய கடப்பாடு உள்ளவராவோம்.

எமது ஊரில் பிறந்து, வளர்ந்து, அறுபதாண்டு காலம் ஒரு சாதாரண மனிதனாகவே வாழ்ந்து மடிந்த ஒருவர் ஓர் இலக்கியப் பரம்பரை உருவாகி ஓங்கி வளர்வதற்கான அடித்தளமொன்றை இட்டிருக்கின்றார் என்றால் அது மிகையான கூற்று அன்று. அவரே அமரர் சபாபதி தியாகு அவர்கள்.

அமரர் தியாகு அவர்கள் **1905** ஆம் ஆண்டு நொச்சியடியைச் சேர்ந்த சபாபதி கதிராசி தம்பதியினருக்குப் புதல்வனாகப் பிறந்தார். மூன்று சகோதரிகளுடனும் நான்கு சகோதரர்களுடனும் பிறந்த இவர் ஆண்டுகளில் மூத்தவர் என்பதால் குடும்பப் பொறுப்பைச் சுமக்க வேண்டியவரானார். இதனால் பள்ளிக் கல்வியை இடையிலேயே நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானார். அவரது ஒரு சகோதரர் தொழில் புரியும் வேளை இறந்தவிட, தமது தந்தை கா.சபாபதி அவர்களுடன் சேர்ந்து சீவல் தொழிலைப் புரிந்து வரலானார். தமது சகோதரர்களான சிவகுரு, தம்பிஐயா ஆகியோர் பாடசாலைக் கல்வியைத் தொடர்வதற்கும் சகோதரிகளுக்கு நல்ல வாழ்க்கைத் துணைகளை அமைத்துக் கொடுப்பதற்கும் இவர் பெரிதும் பாடு பட்டார். பிற்காலத்தில் தமது சகோதரிகளின் பிள்ளைகளுக்கும் கூட தமது உழைப்பை ஈந்துவந்தார். சிவகுரு அவர்கள் தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியரானார். தம்பிஐயா அவர்கள் மலையகத்தில் தோட்டப் பாடசாலை ஆசிரியராகக் கிடைத்த வாய்ப்பை உதறித் தள்ளிவிட்டு, சீவல் தொழிலில், ஈடுபட்டதோடு நாடகக்கலையில் ஆர்வங்கொண்டு, அதில் ஆழமாக ஈடுபாடு கொண்டு இசைநாடக நடிகரும் அண்ணாவியுமானார். பின்னர் சோதிடருமானார்.

தியாகு அவர்களுக்கு பன்னாம்பத்தையைச் சேர்ந்த அப்பாக்குட்டி தங்கம் தம்பதியினரின் மூத்தமகள் செல்லமுத்து அவர்களை பெற்றோர் மணம் முடித்து வைத்தனர். ஆனால் அவரது மனைவி ஒரு சில ஆண்டுகளிலேயே இறந்து போக, மறுமணம் செய்யாமலே தமது இறுதிக்காலம் வரை வாழ்ந்தார். அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் கோயில் பரிபாலன சபை உருவாக்கத்திலும் ஆலய வளர்ச்சியிலும் இவரின் பங்களிப்பும் ஆலோசனையும் இருந்து வந்தது. ஆரம்பகாலத்தில் மூன்றாம் திருவிழா உபயகாரராகி ஆலயத்துக்கான நிதிப் பங்களிப்புகளையும் செய்து வந்தார்.

தியாகு அவர்கள் சிறுவயதிலேயே வாசிப்பு ஆர்வம் கொண்டவர். இவருடைய தந்தையார் பெரிய எழுத்து வியாசர் பாரதக் கதை நூலை வாங்கி வைத்திருந்தார். இது இன்றை A3 அளவு கொண்ட தாள்களில் அச்சிடப்பட்டது. அதேவேளை, வயது வந்தவர்களும் மூக்குக் கண்ணாடியின்றி வாசிக்கக்கூடியதான பெரிய எழுத்தில் (இன்றைய Font Size 16) அமைக்கப்பட்டிருந்தது. இந்நூலை தியாகு அவர்களே வைத்திருந்தார். அவரின் வீட்டிலுள்ள பலரும் இந்நூலை வாசித்திருந்தனர். இந்த நூல் இறுதியாக எங்கள் வீட்டில் இருந்தது. ஓரங்களில் கறையான் அரித்திருந்த நிலையில் தியாகு அவர்களே எங்களிடம் கொண்டுவந்து தந்தார். இந்நூலை சிறுவயதிலேயே அக்காவும் நானும் வாசித்தோம். இதனால் பாரதக் கதையும் அதன் கிளைக்கதைகளும் சிறுபருவத்திலேயே எங்களுக்கு “அத்துப்படியாக” இருந்தன.

இடைக்காலத்தில் தந்தையார் சபாபதி அவர்கள் தொழிலுக்காக முல்லைத்தீவு மாவட்டம் சென்றமையால் தியாகு அவர்களும் அவருடன் சென்றார். அந்நாளிலே ஆனந்தவிகடன், கல்வி, கலைமகள் ஆகிய தமிழ் நாட்டுச் சஞ்சிகைகள் இங்கும் கிடைக்கக் கூடியதாக இருந்தன. தனது உழைப்பின் ஒரு பகுதியை இச்சஞ்சிகைகளை வாங்குவதற்காக ஒதுக்கிய தியாகு அவர்கள் தீவிர இலக்கிய வாசகர்

ஆனார். தாம் வாசித்து முடித்த பின்பு இச் சஞ்சிகைகளை எல்லாம் ஒரு “டிரங்குப்பெட்டியில் வைத்துப் பேணிவந்தார். இடை இடையே ஊருக்கு வரும் போது மறக்காமல் இச்சஞ்சிகைகளை எமது வீட்டில் கொண்டு வந்து தருவார். இச்சஞ்சிகை களை எனது தந்தை, சிவகுரு ஆசிரியர், அத்தான் சின்னத்துரை பரஞ்சோதி ஆகியோர் வாசிக்கத் தொடங்கினர். நானும் அக்காவும் கூட அச்சிறு பருவத்தில் அச்சஞ்சிகைகளை வாசிக்கத் தொடங் கினோம். அப்போது ஆனந்த விகடனிலும் கல்கி யிலும் தொடர் கதைகள் வாராவாரம் வெளிவந்து கொண்டிருந்தன. நானும் அக்காவும் அச்சஞ்சிகை களை எல்லாம் கவனமாகச் சேர்த்து வைத்து, தொடர்கதைகள் முடிந்ததும் தொடர் கதைகள் வெளிவந்த பக்கங்களை ஒன்று சேர்த்து நூலுரு வாக்கினோம். எங்கள் தந்தை தடித்த மட்டையும் போட்டு கட்டித் தருவார். கல்கி எழுதிய பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் போன்ற நாவல்களை எல்லாம் நூலாகக் கட்டியபின்பே நாம் வாசிக்கத் தொடங்கினோம். எங்களின் வாசிப்பை ஒரு போதும் எங்கள் தந்தை தடைசெய்ததில்லை.

நாளடைவில் மஞ்சரி, கலைக்கதிர் ஆகிய சஞ்சிகைகள் இங்கு கிடைக்கக் கூடியதாக வந்த போது, மாதமொரு தடவை வெளிவரும் அச்சஞ்சிகைகளையும் தியாகு அவர்கள் வாங்கத் தொடங்கினார். எங்கள் குடும்பங்களில் வாசிப்புப் பழக்கம் அனைவருக்கும் உவப்பான ஒன்றாக இருந்து வந்தது. இதனால் அயலவர்கள், அவர் களின் பிள்ளைகள் என்று ஒரு வாசகர் வட்டமே எங்கள் சூழலில் உருவாகியது.

அமரர் தியாகு அவர்கள் ஒரு போதும் சினிமா சஞ்சிகைகளையோ “குமுதம்” போன்ற ஜன ரஞ்சகச் சஞ்சிகைகளையோ வாங்கியதில்லை. அக் காலத்தில் நல்ல சிறுகதைகளையும் நாவல்களையும் ஆனந்த விகடன், கல்கி, கலைமகள் ஆகிய சஞ்சிகை களிலேயே படிக்க முடிந்தது. “தான் உண்டு தன் தொழில் உண்டு” என்று இருந்த தியாகு அவர் களுக்கு இச்சஞ்சிகைகளே உற்ற தோழர்களாக இருந்தன. மறுமணம் நாடாது, தமது மனைவியின் நினைவுகளுடனேயே வாழ்ந்த தியாகு அவர்கள் இலக்கிய சஞ்சிகைகளைத் தோழமையாக்கிக் கொண்டு வாசிப்பிலேயேபெரும் பொழுதைக் கழித்தார்.

ஆனாலும், தம்மோடு மட்டும் அவ் வாசிப்பு நின்று விடாமல் தமது குடும்பத்தவர் களுக்கும் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஆதாரமாக இருந்தார். ஆறாம் வகுப்புவரை மாத்திரமே பள்ளிக்கல்வி பெற்ற எனது அம்மாவும், அக்காச்சி (மாமியார்) நல்லதங்கம் சின்னத்துரை அவர்களும் கூட நேரம் கிடைத்தபோது இச் சஞ்சிகைகளைப் படித்து வந்தமையை நினைத்துப் பார்க்கும் போது மலைப்பாக இருக்கிறது.

அமரர் தியாகு அவர்கள் சகோதரிகளினதும் அவர்களின் பிள்ளைகளினதும் நலனையே பெரிதாகக் கொண்டு வாழ்ந்து வந்தவர். அந்நாளில் தமது மருமகன் பரஞ்சோதி அவர்களின் காதல் திருமணத்தை நிறைவேற்றி வைப்பதற்கு முன்நின்றவர் இவரே. தியாகு அவர்கள் தமது இறுதிக் காலங்களில், ஊருக்கு வரும்போது எங்கள் வீட்டிலேயே வந்து தங்கிச் செல்வார். என்மீதும் என் சகோதரிகள் மீதும் நிறைந்த பாசமும் காட்டி வந்தார். 1964 ஆம் ஆண்டில் ஒரு சமயம் அவர் எங்கள் வீட்டுக்கு வந்த வேளையில் தான் அக்காவின் எஸ்.எஸ்.ஸி பரீட்சை முடிவுகள் வெளிவந்தன. அக்காவின் சிறப்புச் சித்தியைக் கண்டு மகிழ்ந்து அச்செய்தியை என்னிடம் சொல்வதற்காக எனது பாடசாலையான நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கு வந்திருந்தார். அப்போது நான் ஏழாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அவர் பொங்கும் உவகையுடன் அச்செய்தியைச் சொன்ன காட்சி இப்போதும் என் மனக்கண்ணில் எழுகிறது.

எஸ்.எஸ்.ஸி வகுப்பு வரை தேவரையாளி இருந்துக்கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த அக்காவை உயர் கல்விக்காக எப்பாடசாலையில் சேர்ப்பதென எனது தந்தை யோசித்துக் கொண்டி ருந்தார். எங்கள் குடும்ப நிலையைத் தெரிந்திருந்த அக்காய்யா சிவகுரு ஆசிரியர் அவர்கள் “பொம் பிளைப் பிள்ளைக்கு இவ்வளவு படிப்பும் போதும் என்றுகூறி ஏதாவது “கிளார்க்” வேலைக்கு விண்ணப்பிக்குமாறு ஆலோசனை சொன்னார். அவருக்கு தனது தம்பி யான எங்கள் தந்தை கஷ்டப்படக்கூடாதே என்ற எண்ணம் இருந்தது. ஆனால் எமது பெரியையா தியாகு அவர்களோ அக்காவைத் தொடர்ந்து படிக்கச் செய்ய வேண்டும் என்றும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையிலேயே சேர்க்க வேண்டும் என்றும் உறுதியாக நின்றார். தாமே அக்காவின் படிப்புச் செலவுகளைப் பார்த்துக் கொள்வேன் என்று ஆதரவாகவும் நின்றார். ஆனால் இச் சம்பவத்துக்குப் பிறகு முல்லைத்தீவுக்குச் சென்ற அவர் உயிருடன் திரும்பி வரவே இல்லை. அவரின் பூத உடல் மட்டும் தான் அதே ஆண்டில் (1964) எங்கள் வீட்டுக்கு வந்து சேர்ந்தது. இரண்டு நாட்கள் மட்டும் நோயுற்றிருந்த அவரின் உயிரை காலன் பறித்துக் கொண்டான்.

ஆனாலும் பெரியையாவின் ஆசை வீண்போக வில்லை. அவரின் உயிரை காலன் பறித்துக் கொண்டான். அவரின் ஆசியுடன் எனது அக்காவே எமது ஊரின் முதல் பெண் பட்டதாரியானார்.

ஒரு சாதாரணனான பெரியையா அமரர் தியாகு அவர்களின் இலக்கிய வாசிப்பு நாட்டமும் பெண்கல்வி குறித்த பார்வையும் என்றும் நினைத்துப் பார்க்கப்பட வேண்டியவை.

# காலம் கரைத்த மனப்பதிவுகள் 1

கலாநிதி த. கலாமணி

அப்போது நாங்கள் பதின்ம வயதுப் பருவத்துள் பிர வேசத்துக் கொண்டிருந்த சிறுவர் களாக இருந்தோம். நாங்கள் தினமும் நொச்சியடி வெட்டை யில் தான் கூடுவோம். நாங்கள் அப்போது விளையாடுவதற்கு நொச்சியடி வெட்டைதான் எங்களுக்கு வசதியாக இருந்தது. எமது சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் கோயிலின் அருகே இருந்த மனோகரா விளையாட்டுக்கழக மைதானத் தில் இளைஞர்கள் கால்பந்து, கைப்பந்து விளை யாடிக் கொண்டிருந்தமையால் அங்கு விளை யாடுவதற்கு எங்களுக்குச் சந்தர்ப்பம் அரிதாகவே கிடைக்கும். இதனால் எங்கள் பருவத்தினருக்கு நிரந்தரமான வெட்டை ஒன்று தேவையாக இருந் தமையால் நாங்கள் நொச்சியடி வெட்டையை நாட வேண்டியிருந்தது.

இப்போது நொச்சியடி வெட்டை இருந்த இடமே தெரியவில்லை. அன்று நொச்சியடி வெட்டையை ஊடறுத்துக்கொண்டுதான் அல்வாய் வடக்குக்குச் செல்ல வேண்டும். வேலுச் சோதிடர், தம்பையாச் சோதிடர் வசித்து வந்த கிளிவிட்டி வீட்டின் முன்னால் இருந்த ஒழுங்கை நொச்சியடி வெட்டையில் தான் வந்து முடியும். இவ் வெட்டையின் வடக்குப் புறத்தே தான் காத்தான் கோயிலும் இருந்தது. இவ்வெட்டையை அடுத்திருந்த ஒற்றையடிப் பாதைக் கூடாகத் தான் நாங்கள் காத்தான் கோயிலுக்குச் செல்வோம்.

நொச்சியடி வெட்டையைச் சூழ இருந்த தறைகளில் எல்லாம் பனை மரங்களே நிறைந் திருந்தன. கிழக்குப் புறத்தே எங்கள் பாட்டன் சபாபதி அவர்கள் வாழ்ந்து வந்த வளவு, அடை யாளமே காணமுடியாத அளவுக்கு நொச்சி மரங்களால் சூழப்பட்ட தறையாக இருந்தது. இதே நொச்சியடி வெட்டையில் தான் எங்கள் மூத்த பரம்பரையினர் கிளித்தட்டு, கிட்டி, யாடி, கைப் பந்து, கால்பந்து முதலிய விளையாட்டு களை எல்லாம் விளையாடி வந்தார்களாம். அயற் கிராமத் திலுள்ள விளையாட்டு அணிகளுடன் கூட இதே மைதானத்தில் தான் ஆரம்ப காலங்களில் கால் பந்துப் போட்டிகளில் விளையாடி வந்தார்களாம். நாமும் அயற் கிராமத்து அணிகளுடன் அன்று இங்கு தான் விளையாடி வந்தோம்.

நொச்சியடி வெட்டையில் சிலவேளை களில் எங்களுக்கு மூத்தவர்களும் வந்து விளை யாடுவார்கள். அவர்கள் கைப்பந்து, அல்லது கால்பந்து விளையாடும் போது நாங்கள் ஒரு புறத்தே கிட்டி விளையாடிக் கொண்டிருப்போம். அந்நாளில் அல்வாய் மனோகரா பாலர் கழகம் என்ற பெயரில் எங்களை எல்லாம் சேர்த்து வைத்துக் கொண்டு பூமாஞ் சோலையைச் சேர்ந்த சி.திருநாவுக்கரசு அவர்கள் எங்கள் கழகம் பற்றி எங்களுக்கு விளக்கங் கள் அளித்துக் கொண்டிருப்பார். பாலர் கழகத்தில் உறுப்பினராக இருந்த நாம் ஒவ்வொருவரும் வாரா வாரம் கழகத்துக்கு ஐந்து சதம் செலுத்தி வந்தோம். நாங்கள் செலுத்திய காசு விபரம் எங்கள் பெயர்களில் ஒரு கொப்பியில் பதிவு செய்யப் பட்டு வந்தது. எங்களுக்கு வேண்டிய பந்து, கிரிக் கெட் மட்டை போன்ற விளையாட்டுக்குத் தேவை யானவற்றை வாங்குவதற்கு இப்பணம் பயன்படுத் தப்பட்டது. மனோகரா பாலர் கழகத் தின் இந்நட வடிக்கை அந்நாளிலேயே எங்களுக்கு Self reliance என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுகின்ற "சுயசார்பு" என்பதை எங்களுக்குக் கற்றுத்தந்தது. நாங்கள் பாலர் கழகக் கூட்டங்களில் தவறாமல் பங்கு பற்றி வந்தோம்.

அந்நாளில் கோயில் திருவிழாக்களில் வாண வேடிக்கை ஒரு முக்கியமான நிகழ்ச்சியாக இடம் பெறும். வதிரி உல்லியனொல்லை அம்மன் கோயில் திருவிழாக்களில் வாணவேடிக்கையைப் பார்ப்பதற் கென்றே நாங்கள் அங்கு செல்வோம். இரவுத் திருவிழா முடிந்து அதிகாலை 4 மணிக்கு சுவாமி வெளிவீதி வலம் வரும் போது மேற்குப்புற வீதியில் சுவாமி பிரவேசிக்கையில் வாண வேடிக்கைகள் ஆரம்பமாகிவிடுமம். எத்தனையோ வர்ண ஜாலங்களை வாணவேடிக்கைகள் காட்டிக் கொண்டிருந்தாலும் கொட்டு ஒன்றிலிருந்து வெளிக் கிளம்பி உயரமாகச் சென்று சத்தமாக வெடிக்கின்ற "அவுட்டு" என்பது தான் எங்கள் எல்லோரையும் கதிகலங்க வைக்கும். இரவுத் திருவிழா நடைபெறும் போது இடைஇடையே இந்த "அவுட்டு" வெடியை வெடிக்க வைத்துக் கொண்டிருப்பார்கள்.

எங்கள் ஊரிலும் "அவுட்டு" வெடியைச் செய்யக் கூடிய விண்ணர் ஒருவர் இருந்தார். அவர்தான் அட்டறந்தையைச் சேர்ந்த அமரர் ஆ.பொன்னையா அவர்கள். இவரை "வெடிப் பொன்னர்" என்றே பலரும் அழைத்து வந்தனர். பொன்னையா அவர்களுடைய அவுட்டுக்கு பல இடங்களிலும் வரவேற்பு இருந்தது. அவருக்குப் பல "ஓடர்கள்" வரும். வசதிவாய்ப்பு உள்ளோர் திருமண அழைப்புகளின் போதும் கூட இந்த அவுட்டுகளை வெடிக்க வைத்துக் கொண்டாடுவர். இதனால் மேலும் மேலும் சத்தமாக வெடிக்கும் அவுட்டுகள்

(தொடர்ச்சி 10 பக்கத்தில்...)

சிறுகதை

# காற்சட்டையும் வேட்டியும்

அல்வாயூர் கவிஞர் மு. செல்லையா

சீ! இவ்வளவு நேரமாகியும் பஸ் வர வில்லையே. அரசாங்கம் தேசிய மயமாக்கியபின்பு பஸ் பிரயாணம் மிகவும் சீரழிந்து விட்டது. அவசியமாகப் போக வேண்டுமென்று வந்தும் ஒரு மணித்தியாலம் வீணே தாமதிக்க வேண்டிய தாயிற்று. நண்பர்கள் என்னை எதிர்பார்த்து ஏசியிருப்பார்கள். நான் வரவில்லை யென்று நம்பிக் கொண்டு காரியத்தைக் தொடங்கி விட்டார்களோ?

அல்லது என்னைக் காத்துக் காத்து இன்னும் இருப்பார்களோ? ஒன்றும் செய்ய முடிய வில்லையே! வீடு திரும்பவும் மனமில்லை. அங்கே போகவும் முடியவில்லை. என்று கவலையுடன் சிந்தித்தபடி வீதி ஓரத்திலே எலும்புருக்கி மரத்தின் நிழலிலே நின்றார் காற்சட்டையணிந்த பிரயாணி ஒருவர்.

சனிக்கிழமைகளிலே எட்டுப் பத்துப்பேர் சேர்ந்து மாலை 4மணி தொடக்கம் பொழுது போக்குவதற்காகக் களியாட்டுக்கள் நடத்தி வருகிற உத்தியோகத்தர் திருக்கூட்டத்திலே, தம்மை மறந்து இந்தத் தரணியை மறந்து ஒரே இன்ப வெள்ளத்திலே மூழ்கிக் கிடக்கவேண்டிய இவர் 5 மணியாகியும் பஸ் கிடைக்க வில்லையே என்று தத்தளித்தார்!

பெரிய புகையிரத நிலையங்களில் அபாயத்தை அறிவிக்கும் சிவப்பு நிற விளக்குகளைப் போல அந்த எலும்புருக்கி மரத்திலே செந்நிறப் பூக்கள் பெருந் தொகையாக மலர்ந்தி ருந்தன. அவைகளும் அவருடைய பிரயாணத்திற்குத் தாமதக் குறிப்புக் காட்டுவதுபோல் அபாய அறிவிப்பு செய்கின்றனவோ? அவரின் கண்கள் மேற்கு நோக்கி நோக்கி அலுத்துவிட்டன.

இந்த எலும்புருக்கி மரத்திற்கு 200 யார் தூரத்திலே தெருவோரத்திலே வேறொரு மரம் முக்கும் மொழியும் வளைவும் பொருக்கும் கொண்ட அந்தப் பூவரசு மரத்திலே ரண்டொரு கிளைகள் பசுமையாக இருந்தன. மற்றவை கருகிக் காய்ந்து விட்டன. மலட்டுத் தன்மை பொருந்திய சில குடும்பங்களில் பிறக்கின்ற பிள்ளைகள் வாடலாய் நோஞ்சலாய் இருப்பதுபோல் பூவரசின் பச்சைக் கிளைகளிலே சிற்சில இலைகள் அங்கு மிங்கும் கிடக்கின்றன.

ஆழ்ந்த சிந்தனையுடன் வேகமாக நடந்து வந்த ஒரு கிழவனார் அது ஒரு மரம் என்ற காரணத் தினால் நிழலும் இருக்கும் என்று நம்பி அதன் கீழே வந்து நின்றார். நிழலுண்டா என்று ஆராய்வதற்கு எங்கேயோ ஒடிக்கொண்டிருந்த அவரது சிந்தனை வேகம் இடங்கொடுக்கவில்லை. அந்த மரத்திற்கும் அவருக்கும் ஏறத்தாழ ஒரே வயதுதான் இருக்கும். முழந்தாளின் கீழே சிறிது இறங்கிய நாலுமுழ வேட்டி. அது அவிழ்ந்து விழுந்து விடுமோ என்று பயந்து அரையைச் சுற்றி இறுக்கியதுபோன்ற சால்வைக்கட்டு. நாலு ஐந்து மாசங்கள் “சவுளக் கத்தி” படாத முகம்! எலுமிச்சங் காயளவான குடுமி. இந்தக் கோலத்துடன் அவரும் பஸ் வண்டியை எதிர் பார்த்து நிற்கிறார். கால்மணி அரைமணி முக்கால் மணி என்று காலமும் வளர்கிறது. அவருடைய மனத்துடிப்பும் வளருகிறது.

“ஐயோ மகளே, நீ என்ன பாடுபடுகிறாயோ வேதனையுடன் உன் புருசன் உன்னை ஆறுமாசக் கெற்பத்தில் விட்டுச் செத்த கொடிய கவலையும் சேர்ந்து உன்னை வருத்த நீ எப்படித் துடிக்கிறாயோ? பாழாய்ப்போன பஸ் இன்னும் வரவில்லையே! இளம் வயசென்றால் ஓடி நடந்தாயினும் வந்திருப் பேனே. இந்தப் பஸ் வருமுன் அந்த நாளிலே நடந்து பழகிய என் கால்கள் இருந்தாலும் பஸ் வருமென்ற நம்பிக்கையால் நேரத்தைப் போக்கிவிட்டேனே! அல்லாமலும் கவலையான இந்த நேரத்திலே நடக்கவுங் கால்கள் தடுமாறுகின்றன. என்ன செய்யலாம்! தாமரை இலையிலே பட்ட தண்ணீர் போல் மனம் தத்தளிக்கிறதே! செல்வச்சந்நிதி முருகா! நீதான் அந்த ஏழைக்கு உதவி!!

தனது மகளை முதற் பிரசவத்திற்காக ஒரு வைத்தியசாலையிலே விட்ட இம்முதியவர் அப்பெண்ணுக்கு அவசியமான விசேஷமருந்து ஒன்று பட்டணத்திலே வாங்குவதற்கு 25 ரூபா தேவையென்று டாக்டர் சொல்லியபடியால் தம் வீட்டிற்கு வந்தார். அயலிலுள்ளவர்களிடம் கடனாகப் பணங் கேட்டு அலைந்தார். கிடைக்க வில்லை! கடைசியாகத் தமது கடுக்கண்கள் இரண்டையும் கழற்றி அடகு வைத்து விட்டுக் காசை வேட்டித் தலைப்பிலே முடிந்து இடுப்பிலே சொருகிக் கொண்டு வேகமாக வந்து பஸ்ஸைக் காத்து நிற்கிறார்.

தூரத்திலே ஒரு பஸ் வருகிற குறி தோன்றிற்று. மகள் சுகமாகப் பிள்ளை பெற்று விட்டதுபோன்ற ஒரு பூரிப்பு! கால் மைல் தூரத்திலே பஸ் வந்துவிட்டது. காசு முடிச்சை ஒரு கையால் இறுக்கிப் பிடித்தபடி, அப்போது தொடக்கம் மற்றக்கையால் பஸ்ஸை நிறுத்துஞ் “சைகையை” யைக் காட்டத் தொடங்கி விட்டார்! பிரயாணிகள் நெருங்கி நிறைந்த அந்தப் பழைய வஸ்வண்டி, நிதி நெருக்கடி நிறைந்த அரசாங் கத்தைப் போல இயங்கிக் கொண்டு வந்தது!

*10-12 யாருக்குள்ளே பஸ் வந்து விட்டது. கிழவனார் ஓரத்திலிருந்து 3-4 அடி முன்னேறித் தாவிப் போய்க் கை முழுவதையும் நீட்டித் தடுத்தார். என்ன ஆச்சரியம் ! பஸ் நிறுத்தப்பட வில்லை. இடமில்லை என்ற கருத்திலே கண்டக்டர் கையை அசைத்துக் காட்டினார். கிழவனார்க்கு இடி விழுந்தது போலிருந்தது.*

*அடுத்து எலும்புருக்கி மரத்தின் கீழே நின்ற காற்சட்டைக்காரன் கைதட்டித் தடுத்தான். “நெருக்கடி யானாலும் ஒரு மாதிரி ஐயாவை ஒரு மாதிரிப் போட்டுக்கொண்டு வா?” என்று சாரதி கூறினான். அவரும் உள்ளே நுழைந்தார்! இந்த அநியாயத்தைக் கண்டதும் கிழவனுக்குண்டான கோபமும் ஆத்திரமும் கடல்போலப் பொங்கி எழுந்தன. ஏதோ எல்லாம் எண்ணித் துடித்தார். கடவுளே வெளி வேஷத்தை மதிக்கும் இந்த உலகத்திலே ஏழைகளுக்கு இடமில்லையோ என்று பெருமூச்சு விட்டார்! செய்வதின்னதென்றே அவருக்குத் தெரியவில்லை. மகளின் வேதனைக் குரல் காதில் கேட்பது போன்ற ஒரு பிரமை. அவரைக் கௌவிப் பிடிக்கின்றது! சந்நிதி முருகா என்று கூறிய படி ஒரு விதக் கிறுதியடைந்து நிலத்திலே குந்திவிட்டார்!*

*சற்று நேரத்தினுள்ளே ஒரு மோட்டார்க் கார் தூரத்திலே வேகமாக ஓடி வந்தது. கிழவனார் வீதியின் நடுவில் போய்க் கும்பிட்ட கையுடன் நின்று அதைத் தடுத்தார். கிளீச் என்ற சத்தத்துடன் கார் நின்றது. சாரதி கிழவனை விசாரித்தான். முதியவர் கண்ணீர் சொரிந்தபடி தடுமாறிய சொற்களால் விஷயத்தை வெளியிட விரும்பினார். தேகம் நடுங்கிற்று. சாரதிக்கு அவருடைய நிலைமை விளங்கி விட்டது. பெரியவரே ஏறு என்றான். மாண்டவன் மீண்டதுபோன்ற மகிழ்ச்சி யுடன் கிழவனார் உள்ளே ஏறி ஒடுங்கியபடியே ஆசனத்தி லிருந்தார். முருகா என்று வாய் முணு முணுத்தது. சாரதியை பாராட்டிப் பேச எண்ணினார். அவருடைய வறண்ட நாக்கு பேச இடந்தரவில்லை. மனமெல்லாம் மகளிடமும் சந்நிதிகோவிலிலும் மாறிமாறிச் செல் கின்றன. வைத்தியசாலையின் வாசல் சமீபிக்கின்றது. காசுமுடிச்சை அவிழ்த்தபடி தம்பிக்கு எவ்வளவு என்று அடிக்குரலால் கேட்டார் கிழவனார். கார் நின்றது ஒன்றும் வேண்டாம் மகளைப் போய்ப் பாரப்பா என்று சாரதி சொல்லி இறக்கிவிட்டுப் பறந்தார். கிழவனார் காதை மகளிருக்கும் அறைப்பக்கம் திருப்பி மூச்சையும் கொஞ்சம் அடக்கியபடி நடக்கிறார். கால்கள் பின்னித் தடுமாறுகின்றன. எண்ணக் குவியல் நெஞ்சில் நிரம்பு கிறது. அறையைக் கிட்டுகிறார். ஆரவாரம் ஒன்றையும் அறிய முடியவில்லை. மகளைப் பராமரித்த கிழவியையும் வெளியில் காணவில்லை. உணர்வற்ற சூனிய நிலையிலே அறைக்கதவைத் திறந்தார். ஆண்பிள்ளை தொட்டிலிலே கிடக்கிறது. அப்பு வந்துவிட்டியே பேரனைப் பார் என்றாள் மகள்.*

*மாண்ட மருமகள் மீண்டதான உணர்ச்சியுடன் பிள்ளையைக் கொஞ்சி விட்டு முருகா என்ற மெல்லோசை வெளியே வர நிலத்திலே சுவரோடு சாய்ந்து நெடுமூச்சு விட்டபடி இருந்தார்.* ●

**(காலம் கரைத்த மனப்பதிவுகள்.... 8 பக்க தொடர்ச்சி...)**

வேண்டுமென்று பொன்னையா அவர்களுக்குக் கோரிக்கைகள் வரும்.

பொன்னையா அவர்கள் தமது வீட்டில் வைத்தே சத்தமாக வெடிக்கும் இந்த அவுட்டு களைச் செய்வார். சில வேளைகளில் புதிதாகச் செய்யும் அவுட்டுகளில் ஒன்றை, சோதனைக்காக வெடிக்க வைத்தும் பார்ப்பார். வெடி மருந்து களைப் பொருத்தமாகக் கலவை செய்து, அவற்றை அழுக்கி, மாட்டுத்தாளொன்றில் சுற்றி, கொட் டொன்றில் வைத்து பின்பு வெடிக்க வைக்கும் நுட்பம் எங்கள் ஊரில் அவருக்கே மட்டுமே தெரிந்த ஒன்றாக இருந்தது. அக்காலகட்டத்தில் தான் ஒரு நாள் நொச்சியடி வெட்டையில் நாங்கள் விளையாடிக் கொண்டிருந்தோம். மாலை நேரம் ஐந்து மணி இருக்கும் திடீரென்று ஒரு பெரிய வெடிச்சத்தம். விளையாடிக்கொண்டிருந்த நாங்கள் நிலை குலைந்து போனோம். சற்று நேரத்திலேயே, அது சோதனைக்காக பொன்னையா அப்பா வெடிக்க வைத்த அவுட்டுச் சத்தமாகத்தான் இருக்கும் என்று நினைத்து விளையாட்டைத் தொடர்ந்தோம்.

சிறிது நேரம் கழித்து நொச்சியடி வெட்டைக்கு வந்த எங்கள் ஊரவர் ஒருவர் அந்தச் சோகச் செய்தியைச் சொன்னார். புதிய “அவுட்டு” ஒன்றைச் செய்து சோதிக்கும் போது, கொட்டுக்குள்ளேயே வெடித்தனால் பொன்னையா அப்பா உடல் சிதறிப் பலியாகிப்போனாராம். செய்தி கேட்ட நாம் அனைவரும் திகைத்துப் போனோம். அவரின் வீட்டை நோக்கி பலரும் ஓடிக்கொண்டிருந்தோம்.

நாம் இன்று எமது வாழ்க்கைப் பாதையில் இதைவிட பெரிய பெரிய துன்பங்களை எல்லாம் கடந்து தான் வந்திருக்கின்றோம். ஆனால், இப்போது நினைத்துப் பார்த்தாலும், பொன்னையா அப்பாவுக்கு நேர்ந்த துயரம் எங்கள் கண்களில் நீரை வரவழைக்கிறது.



**அஞ்சலி**
**மாசிலாமணி ஸ்ரீதரன் (தேவன்)**
**(30.04.1962 - 13.01.2022)**

*யாழ்ப்பாணம் ஸ்ரீ கலைமகள் சனசமூக சூழலில் "ரஞ்சித பவனம்" இலக்கம் 38, வேலப்பர் ஒழுங்கையில் வாழ்ந்து வந்தவர்களான அமரர்கள் திரு.திருமதி. மாசிலாமணி மகேஸ்வரி தம்பதி களின் இல்லற வாழ்வின் பயனாக தேவன் என்று எல்லோராலும் அழைக்கப்பட்டு வருகின்ற ஸ்ரீதரன் அவர்கள் 13.01.2022 இல் இவ்வுலகைவிட்டு நீத்தார் என்பது பெரும் துயராய் எம்முள் வடியா நிலையில் தேக்கமுற்றிருக்கின்றது.*

*30.04.1962 இல் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை அரியாலை மேற்கு ஆனந்தா வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை யிலும் கற்றார். இவர் திருமதி மனோரஞ்சிதம் அமிர்தலிங்கம், திருமதி பிறேமலதா பாரதிதாசன் ஆகியோரின் உடன் பிறப்பாவார்.*

*தொழிலில் ஏற்பட்ட ஆர்வத்தினால் யாழ்ப் பாணம் "பற்றீசியன்" தொழிற்பயிற்சி நிறுவனத்தில் கட்டடத் தொழிலைப் பயின்று ஒரு தேர்ச்சி பெற்ற கட்டடக்கலைஞராக தன்னை வளர்த்துக் கொண் டார். அரச தொழில் ஒன்றைப் பெறும் நோக்கோடு வாழ்ந்து வந்தவருக்கு எதிர்பாராத விதமாக தொழில் நிமிர்த்தம் கட்டார் (டோகா) செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. இதனை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டவர் கட்டடத் தொழில் நிமிர்த்தம் வெளிநாடு சென்றார். கிட்டத்தட்ட (1992 - 1998) ஆறு வருடங்கள் அங்கு நிலைத்து நின்று தொழில் புரிந்தவர் 1998 இல் ஊர் வந்து சேர்ந்தார்.*

*ஊர் வந்து சேர்ந்தவருக்கு அதே ஆண்டு 14.12.1998 இல் அல்வாய் பிச்சந்தோட்டம் பாக்கியபவனத்தைச் சேர்ந்த அமரர்களான திரு.திருமதி. அரியகுட்டி பாக்கியம் தம்பதிகளின் இரண்டாவது புதல்வி சத்தியகலாவை இரு வீட்டாரும் இணைந்து பெரியோர்களின் முன்னிலையில் திருமணம் செய்து வைத்தனர். இத் தம்பதிகளின் இல்லற வாழ்வின் பயனாக இரு புதல்விகளைப் பெற்றெடுத்தனர். இவர் முறையே ஹம்சனா, அனேகதா ஆகியோராவர். இக் குடும்பத் தினர் தமது "அபிராமி" இல்லத்தில் வாழ்ந்து வருகின்றனர்.*

இவர் தான் சார்ந்த அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய செயற்பாடுகளுக்கு தன்னாலான பங்களிப்பை வழங்கி வந்ததோடு கலை நிகழ்ச்சிகளிலும் தன்னை ஒருவராக இணைத்து செயற்பட்டும் வந்தார். அத்தோடு தமது குல தெய்வமான வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்மன் ஆலய செயற்பாடுகளிலும் அரியாலை ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் ஆலய செயற்பாடுகளிலும் உணர்வு பூர்வமாக தனது பங்களிப்பை ஆற்றி வந்ததோடு ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் ஆலய திருவெம்பாவை **6ம்** நாள் பூசையின் உபயகாரரில் ஒருவருமாவார்.

*நல்ல வாசகரான இவர் தான் பிறந்து வளர்ந்த கிராமத்திற்கு ஆற்றிய பங்களிப்புகளோடு புகுந்த இடத்து சனசமூக செயற்பாடுகளுக்கும் தனது பங்களிப்பை வழங்கி வந்தார். அது மட்டுமல்லாமல் எமது ஆலடிப்பிள்ளையார் ஆலய நான்காம் திருவிழா உபயகாரருமாவார்.*

*வெளிநாடு சென்று திரும்பியவருக்கு யாழ் மாநகரசபையில் அரச நியமனம் கிடைத்தது. மனத் திருப்தியோடு அத்தொழிலில் தனது கவனத்தைச் செலுத்தி வாழ்ந்தவர். ஓய்வு பெறும் காலம் நெருங்கும் வேளை பணி முடித்து வீடு வரும் போது விபத்து ஒன்றில் சிக்கி மந்திகை அரசினர் வைத்தியசாலையில் காலமானர்.*

*அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் ஆறதலடையவும் எல்லாம் வல்ல ஆலடியானை "நாங்கள்" வேண்டி நிற்கின்றோம்.*

- செல்லக்குட்டி கணேசன்

**இதழ் 11 திருத்தங்களும், மேலதிக இணைப்புகளும்**

1. "எமது கிராமத்தின் முன்னோடி பெரியார் மு. வைத்திலிங்கம்" என்னும் கட்டுரையில், மு. வைத்திலிங்கம் அவர்களின் உடன்பிறப்பான **பொன்னையா** அவர்கள் தவறவிடப்பட்டுள்ளார். **(செல்லையா, தங்கரூபம், சின்னத்தங்கம், பொன்னையா இவரின் உடன் பிறப்புகளாவர்)**

2. உதைபந்தாட்டம் தொடர்பான இரண்டு படங்களிலும் "2020 ம் ஆண்டுக்கான" என பதிவிடப்பட்டுள்ளது. **2021 ம்** ஆண்டுக்கான என்பதே சரியானதாகும்.

3. இறுதிப்பக்கத்தில் உள்ள 2021.02.01 முதல் 2021.12.31 வரையான பிறப்புகள் பதிவில்,
1. துவாரகன் சாத்மிகா – 2021.11.23
2. ரெனிகாந் ஜெரூசின் – 2021.09
3. கீதாஞ்சன் வர்ணிதன் – 2021.11.01
ஆகிய குழந்தைகள் பெயர்கள் விடுபட்டுள்ளன.

**தவறுகள், விடுபடல்கள் சுட்டிக்காட்டப்பட்டால் திருத்தப்படும்.**

## கனத்த மனத்துடன்

மறைந்தும் மறந்து போகும்
மகத்தான மரபுக்கலை வடிவங்கள்
நிறைந்த சனத்திரளின் மத்தியிலே
நிலவொளியில் தானமர்ந்து
அகன்ற விழிகளுடன் பார்க்கும்
அரங்க கூத்துக்கள் தானின்று
உறைந்து போனவையாய்
உருக்குலைந்த நிலைதனிலே...
சிறந்த மரபுக்கலைகளிங்கே
சிதறுண்டு போனதுவே
கட்டுச்சீன் தனைக் கட்டி
காட்டுக் காட்சி கண்டு
களித்த உள்ளமெல்லாம் இன்று
கனத்த மனங்களுடன்...
வேட்டோசை ஒரு புறம்
வெளிநாட்டு மோகம் மறுபுறம்
அலைந்து திரிந்த அகதி வாழ்வு
அவை மட்டுமா...?
அகலத்திரைகள் எல்லாம் ஒடுங்கி
அங்குலத் தொலைக்காட்சியாகி
அதற்கு முன்பே தானமர்ந்து
அடிபிடி சண்டைப் படங்களுடன்
அழுகையே காட்சியாக...
அடிக்கடி தொடரும் என்ற
தொலைக்காட்சித் தொடர்கள்...
இவை யாவும் இழக்க வைத்ததுவே
இனிய எம் கலை மரபுகளை
இனியொரு அண்ணாவியார்
இழந்தவை மீட்க வரவேண்டும்
அரங்குகள் யாவிலும் இனி
ஆட்டம் பாட்டுக் கூத்துக்கள்
ஆர்ப்பரிப்பாய் அதிர வேண்டும்
நிலவொளியின் மீதினிலே
நின்ற பயணம் தொடர வேண்டும்
இல்லையேல்... இங்கே
இனியொரு நடிகமணி
இனிய குரல் நாடக கலாமணி
இசை நாடக மேதைகள்
இப்பாரில் தோன்றுவார்கள்...?

- வே.ஐ.குமரதாஸன்

## தம்பி சற்று சிந்தி...

சுறாமீன் கரைக்கு வந்தால்
மனிதனுக்குச் சாப்பாடு
மனிதன் கடலில் விழுந்தால்
சுறாமீனுக்குச் சாப்பாடு!
எங்கே எது இல்லை?
காட்டில் மட்டும்தானா முள் - அது
ரோட்டிலும் இருக்கிறது
பார்த்து நடந்தால் காட்டிலும் நடக்கலாம்
பாராமல் நடந்தால் ரோட்டிலும் நடக்க
முடியாது!
விழுந்து கிடந்தவன் எழுந்து நடந்தால்
விழிகள் இரண்டும் விரியும்
சிலிர்த்து எழுவதில் இருக்கும் இன்பம்
சோம்பிப் படுப்பதில் இல்லை!
தடைகள் வருவது தாண்டத்தானே
சோதனைகள் வருவது
சாதனைகளை எல்லாம்
சரித்திரமாக்கவே!

- சின்னத்தம்பி பத்மராஜன்

## நெஞ்சு பொறுக்குதில்லையே...

நெஞ்சு பொறுக்குதில்லையே
நேரில் நடப்பதெல்லாம்
பிஞ்சு எல்லாம் முற்றி
பித்தாகிப் போச்சிது இங்கே
நஞ்சாகிப் போச்சிது
நட்டாற்றில் கலாசாரம்
வெஞ்சினம் கொண்டென்ன
வேறாகிப் போகின்றோம்
நெஞ்சு பொறுக்குதில்லையே
நேரில் நடப்பதெல்லாம்

ஒரு காலம் பண்பாட்டின்
உறைவிடம் நாம்
உலகிற்கே பண்பாட்டின்
வழியிடம் நாம்
தமிழ் என்றும் தமிழன் என்றும்
தரணியில் நிமிர்ந்த
அடையாளம் தொலைத்தின்று
சிதைந்தழியும் வக்கிர வெளியில்
நாளும் நாம் புதையுண்டபடி
நாளும் வரும் செய்திகளை படிக்கையிலே!
நம் குடும்பங்களில் நடப்பதை
நினைக்கையிலே
ஐயகோ நெஞ்சு பொறுக்குதில்லையே!
ஐயகோ நெஞ்சு பொறுக்குதில்லையே!

நாம் ஒன்றாய் ஒற்றுமைப்பட்டோம் -
என்றிருக்க
நம்மில் சிலர் செய்யும் நரித்தனங்கள்
காண்கையில்
நாளும் சிறுவர் பெண்கள் வன்முறை
காட்சிகள் - காணுகையில்
முதியோர் இல்ல முதுமை துயர்
காணுகையில்
படித்தவரே பிழைவிடும்
படி தாண்டல் காணுகையில்
படித்ததற்கேற்ற வேலை இங்கு
கிடைத்திடாத ஏக்கங்கள் காணுகையில்
எல்லாமே பணத்திற்கு விலை போன ஈன
நிலை காணுகையில்
பிறர் துயரது போக்காது
ஆடம்பரம் காணுகையில்
நெஞ்சு பொறுக்கவில்லை
நெஞ்சு பொறுக்க வில்லை

பகட்டான வாழ்வில் வெளிவேச வாழ்வில்
மனிதத்தை தொலைத்து வாழ்கின்ற
மனிதா எண்ணிப்பார்
உன் உள்ளத்தில் ஒளியிருக்க
வெளியே எதைத் தேடி வீணாய் ஏன்
அலைகின்றாய்
வீட்டு தொலைக்காட்சிக்குள் மூழ்கி
விடுதலையாகாது தவிக்கும் பெண்களை
சின்னத்திரைக்குள் கலந்து சிதறும் குடும்ப
உறவுகளை நினைக்கையில்
நெஞ்சு பொறுக்குதில்லையே
நெஞ்சு பொறுக்குதில்லையே

- செல்லத்தம்பி சுரேந்திரா

## துள்ளித் திரிந்த காலம்

கமுக மரத்து ஓலையும்
கட்டை வண்டிச் சவாரியும்
காற்சட்டை போட்ட தம்பிமார்
வால்களாய்த் தொங்கிய வாறே

அண்ணன்களோ சவாரி செய்திட
அரும்புகள் மகிழ்ந்திடும் விளையாட்டு
அந்தநாள் ஞாபகத்தைத் தந்து நிற்க
அருமையான பராயம் கண்முன்னே

காட்சிகளோ மனதிலே வந்துபோக
காண்பவை சொர்க்கத்தைக் காட்டுதே
காற்றாடி செய்து சுழற்றினோம்
காகிதக் கப்பலில் ஏறினோமே

மழை வந்து மண்ணில் உதிக்க
மழலைகள் நாம் துள்ளிக்குதிக்க
மன்றாடிப் பெற்றோர் பின்னே
மகட்கு மருந்தாகும் முத்தமதே

துடிப்பான இளமை அன்று
துன்பம் கண்டு அஞ்சுவதில்லை
துணிந்தே வாழ்வை எதிர்காண
தூணாக உறவுகள் சங்கமமே.

- இரா.கௌரிபாலா

## நம்பிக்கைகள்

பிரித்தறிய முடியாத வலிகளுடன்
நாடி நரம்புகள் தளர்ந்து கிடக்கின்றன

செலுத்தப்பட்ட
குழாய்களுடனும்
தகர்க்கப்பட்ட
நம்பிக்கைகளுடனும்
உயிர் எங்கோ ஒளிந்து கிடக்கிறது.
தேடித்தேடி ஊசி முனைகளால்
உயிர் காக்க விழையும்
நவீன மருத்துவ
யுக்திகள்

இலக்கியம், சமூகம், மதம், இனம்
எல்லாம் ஒரு புள்ளியில் அடங்கி விட
தேவதூதர்களாய் வைத்தியர்களின்
பிரசன்னம் மட்டும்
ஆசுவாசமளிக்கும்

நினைவின் மீள்சுழற்சியில்
புள்ளிகளும் மெதுமெதுவாக விரிந்து
நிஜ உலகிற்கு அழைக்கும்.

- வே.ஐ.வரதராஜன்